செ.வெ.எண் : 1012 நாள் : 21.11.08

# செய்தி வெளியீடு

## நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் வீட்டு வசதி மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பாக ரூபாய் 70.04 கோடி திட்டம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதிகளுக்கான திட்டம், தமிழகத்தில் உள்ள நகர்புர உள்ளாச்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நகர்புரங்களில் உள்ள குடிசை பகுதிகளில் வாழ்வோரின் வாழ்க்கை தரத்தினை உயர்த்த புதிய வீடுகள் கட்டுதல், மற்ற உட்கட்டமைப்பு வசதிகளான சாலை, குடிநீர், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், பல்நோக்கு வளாகங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் / நகர்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின் மூலம் ஏற்படுத்தி தரப்படுகின்றது.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி திட்டத்தில், மத்திய அரசு 80% மான்ய நிதியும், 10% மாநில அரசு மான்ய நிதியும் 10% பயனாளிகளின் பங்கு தொகையாகவும் இருக்கும்.

நகர்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்தில் 50% மத்திய அரசும் 40% மாநில அரசும், 10 % பயனாளிகளின் பங்குதொகையாகவும் இருக்கும்.

தமிழகத்தில் இதுவரை நகர்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் 24 திட்டங்களுக்கு ரூ.2134.10 கோடியில் 85607 வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 30 உள்ளாட்சி அமைப்புகளுக்கு 19766 வீடுகள் கட்டவும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் ரூ.225.66 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

இன்று **21.11.2008**, மாநில அளவிலான வழிகாட்டும், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது.

தேனி நகராட்சிக்கான ரூ.3.85 கோடிக்கான திட்ட அறிக்கை, திண்டுக்கல் நகராட்சிக்கான ரூபாய் 9 கோடியே 24 லட்சத்திற்கான திட்ட அறிக்கையையும் பரிசீலனை செய்து ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப கண்காணிப்பு குழு இன்று பரிந்துரை செய்துள்ளது.

சேலம் மாவட்டத்தை சேர்ந்த பேரூராட்சிகளுக்கு ரூ.19.00 கோடியிலும், நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த 7 பேரூராட்சிகளுக்கு ரூ.11.75 கோடியிலும், திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்த 5 பேரூராட்சிகளுக்கு ரூ.4.23 கோடியிலும், ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த 19 பேரூராட்சிகளுக்கு ரூ21.93 கோடியிலும் திட்டங்களை ஹட்கோ மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப மாநில கண்காணிப்பு குழு பரிந்துரை செய்துள்ளது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சென்னையில் உள்ள எழில்நகர், பெரும்பாக்கம் நிலை 1 மற்றும் பெரும்பாக்கம் நிலை 2, மதுரையில் உள்ள பெரியார் நகர், கோவையில் உள்ள உக்கடம் மற்றும் அம்மன் குளம் ஆகிய திட்டங்களில் இடமாற்றம், வடிவமைப்பு மாற்றம், மற்றும் 2008–2009 விலை விகிதத்தில் திருத்திய மதிப்பீடு சமர்ப்பித்துள்ளது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினமாக ரூ.401.80 கோடியினை தமிழக அரசு வழங்கவும் இக்குழு பரிந்துரை செய்தது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன், டுபிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.கௌரிசங்கர், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை வளர்ச்சி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் திரு.ஆர்.செல்லமுத்து, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலர், திரு.கே.தீனபந்து,இ.ஆ.ப., நிதித்துறை அரசு முதன்மைச் செயலர் திரு கு. ஞானதேசிகன்,இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலர், முனைவர் சி.சந்திரமௌலி, இ.ஆ.ப., ; நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மேலாண்மை இயக்குநர், திரு.டி.கே.இராமச்சந்திரன், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ராஜேஸ் லக்கானி, இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சுனில் பாலிவால், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக கூடுதல் ஆணையர் முனைவர் பி.செந்தில்குமார், இ.ஆ.ப., மற்றும் இதர அலுவலர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9